உ

# ஞானோதயம்

ஞானம் 01 சுபானு ௵ மாசி மீ (05 - 02 - 2004) உதயம் 09



மாசி 2004 அன்பளிப்பு: ரூபா 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்திருநெறியை
# வாதத்தின் மூலம் வலியுறுத்திய
# வாதவூரர்

பல சிறப்புக்களும் அமைந்த அத்தாணி மண்டபத்தின் கண்ணே சந்திரகுல அரசனாகிய அரிமர்த்தனபாண்டியன் வந்து சிங்காசனத்தின் மீது வீற்றிருந்தான். அவ்வாறு அரசன் வீற்றிருக்கும் போது அரசனது முன்னிலையில் சில தூதுவர்கள் வந்து வணக்கஞ் செய்து குற்றமற்ற அரசனே! ஆரிய தேசத்து வர்த்தகர்கள் சோழனது நெடிய நாட்டைச் சூழ்ந்த ஆழமாகிய கடற்கரையிலே குற்றமற்ற நல்ல குதிரைகளைக் கொண்டு வந்து இறக்குகின்றார்கள் நாம் அதனைக் கண்டோம் என்று விண்ணப்பஞ்செய்தார்கள் இதனைக்கேட்ட பாண்டிய மன்னன் அத்தூதுவர்களுக்குக் கருணை செலுத்தி விட்டுத் தனது உயிரும் உடலும் போல விளங்குகின்ற திருவாதவூரடிகளது திருமுகத்தை நோக்கி நீவிர் இத்தூதுவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தாவுகின்ற நல்ல குதிரைகளை விலை கொடுத்து வாங்கிக் கொண்டு வாரும் என்று கூறினான். முதன் மந்திரியார் அதற்கு இசைந்த பின்னர், தனது தேவவிமானம் என்று சொல்லப்படும் திரவியசாலையுட் புகுந்து தருமநெறியால் ஈட்டிய திரவியத்தில் நாற்பத்தொன்பது கோடி பொன்னைக்கொடுத்தான்.

இருவகைப் பற்றும் அற்ற மெஞ்ஞானிகள் அத்துவிதமாகக் கலக்கம்பெறும் சிவபெருமானுடைய திருவடிகளைப், பற்றிக்கொண்டவராகிய திருவாதவூரடிகள் புறப்பட்ட ஞான்று சகலவிதமான படைகள் சேனாசமுகங்கள் யாவும் புறப்பட்டன. உடுக்கை முதலாம் வாத்தியங்கள் ஒலித்தன. தாவுகின்ற குதிரைக் கூட்டங்கள் முன்னே சென்றன. எண்ணிக் கணக்கிட முடியாத செருக்குமாகச் சேனைகள் நின்றனர் வீணை குழல் முதலாம் வாத்தியங்கள் ஒலித்தன. சங்குகள் சத்தித்தன. சுபதினத்திலே மாளிகையை விட்டு நீங்கித் திருவாலவாயின் கண் சென்று சொக்கநாத சுவாமியினது வழிபாடு முடித்து அவரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு சந்திரகுல அரசன் அரிமர்த்தன பாண்டியனது அரண்மனையின் கண்ணே சென்று பாண்டியனது அருட்கடாட்சத்தையும் பெற்றுக்கொண்டு மாடங்கள் கோபுரங்கள் சூழ்ந்த மதுரையம்பதியை விட்டு நீங்கிப் பலகாவத தூரம் சென்றார். இனிமேல் திருப்பெருந்துறையை அடைந்த சரிதத்தை நோக்குவாம்.

வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சேவை செய்த அந்தணர் திலகம்
மயிலணி

# சிவஸ்ரீ ச. வரதராஜக்குருக்கள் அவர்கள்

---

சுன்னாகம் மயிலணிப்பதியில் வாழ்ந்த சிவசுப்பிரமணியக் குருக்கள், சர்வேஸ்வர குருக்களின் சிரேஷ்ட புதல்வராகிய சிவஸ்ரீ வரதராஜக் குருக்கள் அவர்களின் திடீர் மறைவு எம்மை மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கியது. வாழ்க்கை நினைப்பதற்கும் மறப்பதற்கும் தான் என்றாலும் இழப்புக்கள் மனத்தை வருத்திக் கொண்டிருக்கும் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். குருக்கள் ஐயாவின் மறைவு 17. 11. 2003 இல் இடம் பெற்றது.

சுன்னாகம் மயிலணிப்பதி சைவ ஆலயங்களால் நிரம்பப் பெற்று வைதீக சிவாகம பிராமண குலத்தைச் சார்ந்தவர்க்கு குரு முத்திரை பொறிக்கப்பட்ட இடம் என்றால் அது மிகையாகாது. அறிவுகொண்ட பெருந்தலைகளும் புலவர்களும் வாழ்ந்து தம் பெருமைகளையெல்லாம் நிலைநாட்டிய ஒரு இடம் மயிலணிப்பதி ஆகும். இவ்வழியில் பிராமண குலத்தில் கௌடிய கோத்திரத்தில் பிறந்தவர் தான் வரதராஜக் குருக்கள். கல்வி அறிவில் சிறந்தும் சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்றும் கல்விப் படிப்பின் பின்னர் ஆலயங்களில் இடம்பெறும் சமயக் கிரியைகளிலும் கலந்து கொண்டு ஒரு சிறந்த குருவாக தம்மை நெறிப்படுத்திக் கொண்டார். 1978ம் ஆண்டு தனது இல்லற வாழ்வை மேற்கொண்டு வாழ்ந்து உமாசுதசர்மா, உமா ஆகிய இரு பிள்ளைகளின் தந்தையானார். தமது குருநாதரின் வழி காட்டலில் வேதசிவாகம அறிவைப் பூரணப்படுத்தி தன்னை ஒரு தலைசிறந்த சிவாச்சாரியாராக்கிக் கொண்டார். ஆலயங்களில் இடம்பெறும் மகோற்சவங்கள், சங்காபிஷேகங்கள், மகா கும்பாபிஷேகங்கள், கிரியைகளை மனஒருமைப் பாட்டுடனும் இதய சுத்தியுடனும் தன்னை அர்ப்பணித்து பொதுமக்களின் உயர் மதிப்பிற்கும் பெருமைக்கும் ஆளானார். மயிலணி கந்த சுவாமி கோவில் ஆலய சிவாச்சாரியராக தமது கிரியைகளை நடாத்தும்போது குருக்கள் ஐயா அவர்களின் ஆளுமை முத்திரை கம்பீரமான தோற்றம் எல்லாம் பக்தர்களையும் வியப்

# சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் வரதராஜக்குருக்கள்



தோற்றம்
24.12.1948

மறைவு
17.11.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்குள்ளாக்கும். கோவில் நித்திய நைமித்திய பூசைகளை குறித்த நேரத்தில் பூர்த்தி செய்து அடியார்களின் அன்புக்கும் மதிப்பிற்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டார்.

இக்காலத்தில் குருக்கள் ஐயா அவர்களுக்கு அவரின் திறமை தகமை மற்றும் அதனோடு சேர்ந்த நற்பண்புகளை அறிந்து கொண்ட பல தேவஸ்தானங்கள் முறையே அவர்களுக்கு ''வேத சிவாகம கிரியாசிரோண்மணி'', ''ஆகமகிரியா பூசகர்'' ''சிவாகம கிரியா தத்துவநிதி'' என்ற கௌரவ பட்டங்களை வழங்கி அன்னாரை பெருமைக்கும் கௌரவத்திற்கும் ஆளாக்கினார்கள். மேலும் சோதிடத்துறை சங்கீதத்துறை முதலியவற்றிலும் குருக்கள் ஐயா சிறந்து விளங்கினார். வைதீகம் சம்பந்தமான விடயங்களில் தேடுதல் மூலம் சந்தேகங்களை நீக்கி பிறருக்கு உறுதியான கொள்கையை ஏற்படுத்தும் வகையில் வழிகாட்டினார். குலதெய்வமான மயிலணி முருகனிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்த குருக்கள் ஐயா ஆலயத்தில் இடம்பெறும் புராணப்படிப்பிலும் திருவாசகம் முற்றோதல், திருமுறை பாராயணம் முதலியவற்றிலும் பங்கு பெறத் தவறவில்லை. குருக்கள் ஐயா அவர்களை மாசிமாதம் 12ம் திகதி புதன்கிழமை சந்திக்க நேர்ந்தது. அன்று அவர் ஒரு பெரிய திருமுறை புத்தகத்தை கொண்டுவந்து இது ஒரு பெரும் பொக்கிசம் இதனை பேணிப்பாதுகாக்க வேண்டும் திருமுறை தான் எங்கள் உயிர் நாடி என்று கூறி சில மணி நேரம் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்று என் முன் காட்சி அளித்த கம்பீரத் தோற்றம இன்றும பசுமையாக இருக்கின்றது. மறுநாள் குருகுல மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்ற பெரு நோக்கின் காரணமாக செல்லும் போது கொக்குவில் பகுதியில் விபத்திற்கு உள்ளானர் என்ற செய்தி என்னை மிகவும் கலங்கவைத்தது. பின்னர் சிலகாலம் சுகக்குறைவாக காணப்பட்டு 17 – 11 – 03 இல் முருகப்பெருமானின் திருவடிகளை அரவணைத்துக் கொண்டார். குருக்கள் ஐயாவினுடைய நினைவு என்றும் நினைவில் நிற்க நாம் முருகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 . 11 . 2003ல் அமரத்துவம் அடைந்த

# கண்மணி – சிவப்பிரகாசம்

திருமதி கண்மணி சிவப்பிரகாசம் மலேசியாவில் வரைபடக்கலைஞராகக் கடமையாற்றி இளைப்பாறிய தெ. மு. காசிப்பிள்ளை அவர்கட்கும் தெல்லிப்பழையைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை அவர்கட்கும் இரண்டாவது மகளாகப் பிறந்தார். இவருக்கு அமரர் இராமநாதன் என்ற அண்ணனும் இலங்கநாதன் என்னும் தம்பியும் மனோன்மணி நாகேந்திரன், சிவமணி என்னும் இரு சகோதரிகளும் உள்ளனர். கண்மணி அவர்கள் மகாஜனாக்கல்லூரியில் யாவரும் மெச்சத்தக்க முறையில் திறமையுடன் கல்வி கற்றுத்தேறினார். உயர் கல்விச் சான்றிதழும் பெற்றார். இவரது திறமையை நோக்கி மகாஜனாக் கல்லூரியில் ஆசிரிய பதவி வழங்கப்பட்டது. 1954ம் ஆண்டு சுங்க அதிகாரி திரு. சிவப்பிரகாசம் அவர்கட்கும் இவருக்கும் திருமணம் நிகழ்ந்தது. இதன் பயனாக ஜெயந்தி, ஜீவன், சுகந்தி, நல்லன் ஆகிய நான்கு புத்திரச் செல்வங்கள். இவ்வம்மையார் ஆசிரியத் தொழிலிருந்து இளைப்பாறினார். அதன்மேல் நாட்டுநிலைமை காரணமாக மட்டக்களப்பு சென்று அங்கு வசித்து வந்தனர். அக்காலப் பகுதியில் இவர்களுக்கு பல இழப்புக்கள் நேரிட்டது. இதனால் மனமுடைந்த நிலையில் விநாயகப் பெருமானின் பாதங்களை அடைந்து விட்டார்.

இவர்களது குடும்பம் காசிவிநாயகர் ஆலயத்துடனும் மகாதனை வயிரவர் ஆலயத்துடனும் நெருங்கிய தொடர்பு பூண்டவர்கள். பல திருப்பணிகளுக்கு உதவி வழங்கிய உத்தமர்கள். அத்துடன் அமையாது கூடுதலான உபயங்களைச் செய்து வருபவர்கள். காசிவிநாயகர் அவர்களது குலதெய்வம். மகாதனையில் இருக்கும்போது தினமும் ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாடு செய்தவர்கள். தற்பொழுது கொழும்பில் இருந்தபோதிலும் தாங்கள் ஊருக்கு வந்து காசிஐங்கரனைத் தரிசிக்க வேண்டும் என்னும் பேரவாவினுடன் விளங்கியவர்கள. எனவே கண்மணி – சிவப்பிரகாசம் அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். இவரின் ஆன்மா சாந்தியடைய ஐங்கரப்பெருமான் அருள் புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநாற்பாதங்கள்

எமது அகவாழ்வையும் புறவாழ்வையும் நெறிப்படுத்தி தெய்வீகத்தை ஏற்படுத்தும் சாதனங்களாகச் சைவநாற்பாதங்கள் காணப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் நாம் இறைவனை அடைவதற்குச் சாதனங்கள். ஆதலால் இவை சைவசாதனங்கள் என்றுஞ் சொல்லப்படும். இவை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புகொண்டவை. ஒன்றின் முதிர்ச்சியால் மற்றது வருவது என்றும் இவை அரும்பு, மலர், காய், கனி போல அமைந்தவை என்றும்,

''விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே''

என்ற பாடல்மூலம் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுகின்றார். மூத்தியில் நாட்டமுடையோர் இவற்றுள் எதனைப் பின்பற்றி ஒழுகினாலும் அதுமுடிவிலே இரண்டறக்கலத்தலாகிய பரமுத்தியை நல்கிவிடும்.

## சரியை

சைவநாற்பாதங்களில் முதலாவதாகக் காணப்படுவது சரியை ஆகும். சரியை என்பது உடம்பு சார்ந்த புறத்தொழிலால் இறைவனின் உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு ஆகும். இவ்வழிபாட்டிலே சாதகன் தன்னை அடிமையாகவும் இறைவனை ஆண்டானாகவும் பாவனை செய்தலாகும். இதனைத் தாசமார்க்கம் என்பர். சரியைமார்க்கமானது கடவுளுக்கு நமது மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் தொண்டு செய்வதாகும். திருக்கோயிலில் செய்யும் திருப்பணிகளைப் பணிவுடனும் அன்புடனும் செய்தல் வேண்டும். சரியைத்தொண்டு நெறிக்கு உதாரண புருஷராக அப்பர்பெருமான் வாழ்ந்துகாட்டினார். ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பது அவருடைய குறிக்கோள் வாசகமாகும். அப்பர் வாழ்வாலும், வாக்காலும் ஒருமித்து வாழ்ந்தவர்.

''நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டு ..................''

என்ற திருத்தாண்டகப் பாடல் வரிகள் வாழும்நெறியே தொண்டு நெறி என்பதை விளக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல், மெழுகுதல், பூ எடுத்தல், மாலை தொடுத்தல், இறைவனைப் புகழ்ந்து பாடல், கோயிலில் விளக்கேற்றல், நந்தவனம் அமைத்தல், அடியார்களைக் கண்டால் அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்தல் என்பன எல்லாம் சரியைத் தொண்டாகும் என,

''எளி அனல் தீபம் இடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்
பளிபணி பற்றல் பல்மஞ் சனம் ஆதி
தளிதொழில் செய்வது தான் தாசமார்க்கமே''.

திருமந்திரப் பாடலில் கூறப்படுகின்றது, திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகசுவாமிகளுக்கு குருவாக வந்த இறைவன் சரியை பற்றிக் கூறும்போது மேற்கூறிய கருத்தினையே வலியுறுத்திக் கூறுகின்றார். திருவாதவூரடிகள் புராணத்தில் வரும் அப்பாடல் வருமாறு.

ஆவ லாலெலெமக் காமலர் மரங்க
ளாக்க லம்மலர் பறித்தவை மலராற்
றாவி லாவகை தார்பல சமைத்த
றணைப்பி வெம்புகழ் சாற்றலன் புடனா
மேவு மாலய மலகிடன் மெழுகல்
விளங்க நல்விளக் கிடுதல்வெம் மடியார்க்
கேவ லானவை செய்தலிச் சரியை
யியற்ற வல்லவர்க் கெம்முல களிப்போம்.

மேலும் திருக்கோவில் மணி அடித்தல், தீவர்த்தி பிடித்தல், சுவாமிகாவுதல், இறைவனின் திருமஞ்சனத்திற்குப் பொருள் கொடுத்தல் என்பனவும் சரியைத் தொண்டாகும்.

உடலால் தொண்டு செய்வதால் உடல்பற்று ஒழியும். நான் எனும் அகங்காரமும் எனது எனும் மமகாரமும் நீங்கும். சரியை நெறி நின்றோர் சிவப்பருமான் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் உலகில் வீற்றிருந்து அவ் உலகபோகங்களை அனுபவித்து வாழ்வர். இம்முக்தியை சாலோக முக்தி எனச் சைவசித்தாந்தம் கூறும்.

சிறுவர், பெரியவர் என்ற வித்தியாசமின்றி எல்லோராலும் செய்யத்தக்கது சரியைத் தொண்டாகும். நாம் சிறு வயதிலிருந்தே ஆலயங்களுக்குச் சென்று சரியைத்தொண்டுகளைச் செய்தல் வேண்டும். ஆலயங்களைத் தூய்மையாக வைத்திருப்பது நமது கடமை. எனவே நாம் அருகிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி. கண்மணி சிவப்பிரகாசம்



மலர்வு
22.05.1932

உதிர்வு
26.11.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களுக்குச் சென்று அதைத் தூய்மையாக்குவதால் எமக்கும் புண்ணியம் கிடைக்கும் ஆகையும் தூய்மையடையும் தொண்டு செய்வதால் எமது உள்ளமும் பக்குவப்படும். எனவே நாம் எல்லோரும் மேற்கூறப்பட்ட சரியைத் தொண்டுகளைச் செய்து இறை அன்புக்குப் பாத்திரமாவோமாக

(தொடரும்)

செல்வி ப. ருத்திராதேவி

---

## மாணிக்கவாசகரின் அற்புதங்கள் (வாதவூரரின்)

1. வாதவூரிற் பிறந்தவர்
வாதவூரர் எனப் பெயர்பெற்றவர்
அறிவும் ஆற்றலும் கண்டவரை
அமைச்சர் ஆக்கிக் கொண்டாரே.

2. குதிரை வாங்கச் சென்றவரை
குருந்த மரத்தின் கீழ் ஏற்றாரே
கொண்டு சென்ற பணமதனைக்
குருவிடம் கொடுத்து மகிழ்ந்தாரே.

3. குதிரையைக் காணாத கொற்றவனும்
கூவி அழைத்தான் மந்திரியை
குதிரை வாங்காத செய்திதனை
குறிப்பால் உணர்ந்தார் மன்னவனும்.

4. ஆவணிமாதா மூல நன்நாளில்
அசுவம் வருமெனக் கூறினரே
நரியைப் பரியாக மாற்றினரே
அமைச்சர் சொல்லைக் காத்தனரே.

5. வந்த பரியின் அழகு கண்டு
மன்னன் பெரிதும் மகிழ்ந்தானே
மறுநாள் பரிகள் நரியாக
மாற்றம் பெற்று வருந்தினவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சீற்றம் கொண்ட மன்னனவன்
சிறிதும் சிந்தனை செய்யாது
மீண்டும் தண்டனை வழங்கினனே
வருந்தி அழுதார் மந்திரியும்.

7. வைகை நதியைப் பெருகச் செய்து
மந்திரியின் துயர் துடைத்தாரே
அந்தி அம்மையின் அன்பினையும்
வையகம் அறியச் செய்தாரே.

8. அணையைக் கட்ட அகிலத்தார்
அனைவர்க்கும் பங்கு கொடுத்தாரே
அடியவர் ஒருவரின் பங்கைக் கட்ட
கூலியாளாய் அவர் வந்தாரே.

9. அணையைக் கட்ட வந்தவர்
ஆனந்த நித்திரை கொண்டாரே
கட்டாதிருந்த பங்கதனைக்
கண்டமன்னன் கோபங் கொண்டான்.

தொடரும்

---

உ

# தைமாத சிறப்புகழ்

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது ஆன்றோர் - வாக்காகும்.
தைமகர சங்கிராந்தி மாசமாகும் - மகரஜோதிவிழா நடக்கும் காலமாகும்.
தைமாதத்திலே - தைப்பொங்கல், சூரியபொங்கல் -
போகிப்பண்டிகை, தைப்பூசம், புதிதுண்ணல்,
புதிர்பூசை நடைபெறும் காலங்களாகும்
தைமாதத்திலே வரும்மூன்றாம் வளர்பிறைச்
சந்திரனை தரிசனம் பெற்றோர் ஆயிரம்
பிறைகண்ட வாழ்வுமலரும் சான்றோர் - வாக்காகும்.
தைமாதத்தில் சங்கடசதுர்த்தியில் விநாயகப் -
- பெருமானை வழிபட்டு பாலறுகினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைசெய்தால் சங்கடங்கள் நீங்கி
சுபமங்கல வாழ்வு கிட்டும்.

தைமாசத்தில் வளர்பிறைச் சதுர்த்தியில் -
விநாயகப்பெருமானை வழிபட்டு அறுகம் -
புல்லினால் பூஜைசெய்தால் இடர்கள்நீங்கி
யோகமான பெருவாழ்வு கிட்டும்.

தைமாசத்திலே பசுக்களை பூஜிப்பதால்
வணங்குவதால் முப்பத்து முக்கோடி
தேவர்களுடை ஆசிகளும நமக்கு
வாழ்விலே கிடைக்கும்.

தைமாதச்சிறப்புகள் உழவர் திருநாளாகின்றது
இயற்கை வழிபாடு ஆகின்றது
இயலபு வாழக்கை மலருகின்றது
சைவசமய புண்ணிய காலமாகின்றது
யாவர்க்கும் திருவருள் பிரகாசிக்கின்றது
தமிழ் வேதங்கள் முரசொலிக்கின்றன
சமயாசார சாஸ்திரங்கள் நல்வழி – காண்பிக்கின்றன.

நாம்கண்ட தெய்வம் சூரிய பகவான்
சைவசமயிகளாகிய நாம இவ்பூவுலகில்
ஆசாரசிலராய் இனமதம்மொழி பேதமின்றி
திருநீறணிந்து ஆதியும் அந்தமுமில்லாப்
பெருமானை வழிபடுவோமாக சைவசமய
வாழ்வுமலர வழிகாட்டுவோமாக
அரஹரநமபார்வதிபதயே — அரஹரமஹாதேவ
தெனனாடுடைய சிவனேபோற்றி
எண்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி
இன்பமேசூழ்க எல்லோரும் வாழ்க.

மைப்பூசு மொண்கட நல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

சித்தாந்த பண்டிதர்
அன்பர் ஷர்மாஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாக்கொத்து - 8, 9

1. குறுமுனி என அழைப்பது யாரை?
2. திருமுறைகளை வகுத்தவர் யார்?
3. தண்ணீர்ப்பந்தல் அமைத்த நாயனார் பெயரென்ன?
4. சந்தான குரவர்கள் யார்?
5. பொன்னாலைப்பிள்ளையார் கோவில் எங்கு உண்டு?
6. காரைக்காலம்மையார் பாடிய நூல்கள் எவை?
7. இலங்கையில் தேவாரப்பாடல் பெற்ற சிவத் தலங்கள் எவை?
8. திருக்கேதீஸ்வரம் எங்கே இருக்கிறது?
9. கேதீஸ்வரம் என்ற பெயர் வந்த காரணம் யாது?
10. திருக்கேதீஸ்வரத்தின் தீர்த்தம் எது?
11. கோணேஸ்வரம் கோயில் எங்கு உள்ளது?
12. கோணேஸ்வரத்தின் தீர்த்தம் எது?
13. ஔவையார் இயற்றிய நூல்கள் எவை?
14. தமிழர்களின் திருநாட்கள் எவை?
15. தீபாவளி எப்போது வரும்?
16. கோயில் என்றால் பிரதானமாக எந்தக் கோயிலைக் குறிக்கும்?
17, செம்மனச்செல்வியின் மறுபெயரென்ன?
18. கூலியாளருக்கு அடித்த அடி எவர்கள் மேல்பட்டது?
19. நவரத்தினங்கள் எவை?
20. நவக்கிரகங்கள் எவை?
21. திருப்பல்லாண்டு பாடியது யார்?
22. திருவிசைப்பா பாடியது யார்?
23. திருமந்திரம் யாரால் பாடப்பட்டது?
24. திருக்காளத்தி மலையிலே சுவாமிபெயர் யாது?
25. கோபுரத்தின் மறுபெயரென்ன?
26. ஆறுமுகநாவலர் எங்கே பிறந்தார்?

(விடைகள் அடுத்த இதழில்)

---

இச்சஞ்சிகை தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் சார்பில், அதன் தலைவர் திரு. சி. கணேசலிங்கக் குருக்கள் அவர்களால், மானிப்பாய் சௌந்தரம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org